00078

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்கைகள் திணைக்களம்
சட்டமாணிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் III
இறுதிப் பரீட்சை - 2021/2022
இலங்கை சட்டங்களுக்கான அறிமுகம்- **LWU1411/LLU3703**
காலம்: மூன்று (03) மணித்தியாலம்
திகதி: 19.01.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

வினாக்களின் எண்ணிக்கை எட்டு (08).

ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. நீதிமுறை பொருள்கோடல்கள் மற்றும் சட்டத்துறை மூலமாக மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமையினால் பிரதேச சட்டம் ஒன்றாக இருந்த கண்டியச் சட்டம் பின்னர் தனியார் சட்டமொன்றாக மாற்றமடைந்தது.
   இயைபான சட்டவாக்கங்கள் மற்றும் நீதிமுறை பொருள்கோடல்களை எடுத்துக்காட்டி பிரதேச சட்டமாக இருந்த கண்டியச் சட்டம் ஆள்சார் சட்டமாக நிலைமாற்றம் அடைந்தமை தொடர்பில் விரிவான குறிப்பு ஒன்றை எழுதுக.

   (20 புள்ளிகள்)

2. சுமந்திரன் 1975இல் யாழ்ப்பாண தமிழ் பெற்றோர்களுக்குப் பிறந்தான். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தனது ஆரம்ப கல்வியை பூர்த்திசெய்த பின்பு சுமந்திரன் இரண்டாந்தர கல்விக்காக கண்டியில் உள்ள திரித்துவ கல்லூரியில் சேர்ந்தான். பாடசாலைக் கல்வியை வெற்றிகரமாக பூர்த்திசெய்த சுமந்திரன் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு உட்பிரவேசித்து சட்டமாணிப் பட்டத்தை முதலாந்தர சித்தியுடன் பூர்த்திசெய்தான். அதனையடுத்து பேராதனை பல்கலைக்கழகத்தின் சட்ட திணைக்களத்தில் விரிவுரையாளராக இணைந்துகொண்டான். அதே பல்கலைக்கழகத்தின் பணிக்குழுவில் இருந்த சசிகலாவை 2003 ம் ஆண்டில் சுமந்திரன் காதல் திருமணம் செய்தான். சசிகலாவும் யாழ்ப்பாண தமிழ் பெற்றோருக்கு பிறந்து அங்கு வளர்ந்தவள் ஆவாள். திருமணத்தின் பின்பு, சுமந்திரனும் சசிகலாவும் கேகாலையில் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தினர். அவர்கள் கேகாலையில் வசிக்கும் போது அவர்களுக்கு ஜன்யா என்ற ஒரே மகள் பிறந்தாள். சசிகலா தனது பதவியில் இருந்து 2012 ல் விலகியதுடன் சுகவீனமுற்றுள்ள தனது தாயைக் கவனிப்பதற்காக ஜன்யாவுடன் யாழ்ப்பாணம் சென்றாள். சுமந்திரன் தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியதுடன், கேகாலையில் வசித்து வந்தான். அவன் ஒவ்வொரு மாதமும் சசிகலாவையும் தனது குடும்பத்தையும் பார்க்க யாழ்ப்பாணம் சென்று வந்தான். சசிகலாவின் தாய் 2017 ல் இறந்தார். 2018 ல் சுமந்திரன் கேகாலையில் புதிய வீடு ஒன்றைக் கட்டியதுடன் சசிகலா மற்றும் ஜன்யா ஆகிய இருவரையும் கேகாலையில் வந்து தன்னுடன் வசிக்குமாறு வேண்டினான். மேலும், அவன் தனியார் ரியூசன் வகுப்புக்களை ஆரம்பிப்பதற்காக, வாடகைக்கு வழங்கும் நோக்குடன், வர்த்தக கட்டடம் ஒன்றை

பேராதனையில் நிர்மாணித்தான். அவன் யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருந்த போது மோட்டார் விபத்தொன்றை சந்தித்து சடுதியாக இறந்தான். சுமந்திரன் பொதுச் சட்டத்தின் கீழா அல்லது தேச வழமைச் சட்டத்தின் கீழா ஆளப்படுகிறான் என அறிந்துகொள்ள சசிகலா உமது அறிவுரையை நாடுகிறாள்.

பொருத்தமான அதிகாரங்களைக் குறித்துக்காட்டி சசிகலாவுக்கு ஆலோசனை வழங்குக.

(20 புள்ளிகள்)

3. "ஆள்சார் சட்டங்களில் உள்ள இடைவெளிகளை நிரப்ப ஒரு சீராக பிரயோகமாகும் சட்டம் எண்ணக்கருக்களின் நியதிச் சட்டம் சாரா அடிப்படையை உரோமன் டச்சுச்சட்டம் வழங்குவதால் இலங்கையில் அச்சட்டம் "பொதுச் சட்டம்" என விபரிக்கப்படுகிறது. மேலும் உரோமன் டச்சுச் சட்டம் இலங்கையில் பல சட்டத் துறைகளில் தொடர்ந்தும் பிரயோகிக்கப்படுகிறது."

இலங்கையில் உரோமன் டச்சுச் சட்டம் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்படும் துறைகளை இனங்கண்டு, உரோமன் டச்சுச் சட்டத்தை அங்கீகரிப்பதிலும் பிரயோகிப்பதிலும் உள்ள இலங்கை நீதித் துறையின் அணுகுமுறையை ஆராய்க.

உமது விடையை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

4. இயைபான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டம் என்பவற்றுடன் தொடர்புறுத்தி பின்வரும் சம்பவங்களை ஆராய்ந்து திறத்தவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

அ) சுமதி என்ற சிங்களப் பெண்ணை திருமணம் செய்திருந்த அயேஷ், ஒருபுடையாக சுயமாக இஸ்லாம் மதத்திற்கு மதம்மாறி சானியா என்ற முஸ்லிம் பெண்ணை திருமணம் முடித்தான்.

ஆ) பாத்திமா என்ற முஸ்லிம் பெண்ணை திருமணம் முடித்து உறவில் இன்னும் இருக்கின்ற அப்துல் என்ற முஸ்லிம் நபர், உரோமன் கத்தோலிக்க மதத்தை தழுவி கிறிஸ்டினா என்ற உரோமன் கத்தோலிக்க பெண்ணை மணம் முடித்தான்.

இ) ரிஷ்வான் என்ற 10 வயது முஸ்லிம் சிறுவன் தனது மாமாவிடம் இருந்து கொடையொன்றைப் பெற்றுக்கொண்டதுடன், ரிஷ்வானுடைய தாயான பெட்ருஷாவினால் அக்கொடை ஏற்கப்பட்டது.

ஈ) ஜமீல் என்பவன் 16 வயது நிரம்பிய முஸ்லிம் பாடசாலை மாணவன் ஆவான். அவனுடைய தந்தையான மஜுத் ஜமீலை பராமரிக்க மறுக்கிறான்.

ஒவ்வொரு பகுதிக்கும் 05 புள்ளிகள் வழங்கப்படும்

**(5x4=20** புள்ளிகள்)

5. "இலங்கையின் சட்ட முறைமை மூன்று ஆள்சார் சட்ட முறைகளையும், காலனித்துவ ஆட்சியாளர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட இரண்டு பிரதான சட்ட முறைகளையும் உள்ளடக்குகிறது. ஆகவே ஒரே நியாயாதிக்கத்துக்குள் முரண்பாடான சட்ட எண்ணக்கருக்களும் கோட்பாடுகளும் பயன்படுத்தப்படுகையில் சட்டத்தில், சிக்கல்கள் தோன்றலாம்."

இலங்கையின் சட்ட முறைமையில் பன்மைத்துவம் தொடர்பாக எழக்கூடிய பிரச்சினைகள் தொடர்பான உதாரணங்களை எடுத்துக்காட்டி மேலே தரப்பட்ட கூற்றை மதிப்பிடுக.

உமது விடையை இயைபான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்துடன் ஆதாரப்படுத்துக.

**(20 புள்ளிகள்)**

6. நீதிமன்ற முறைமை மற்றும் இலங்கையின் நீதிமுறை நிர்வாகம் என்பவற்றிற்கு இல.44, 1973 ம் ஆண்டின் நீதிமுறை நிர்வாக சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்கள் பற்றிய அறிக்கையொன்றை தயாரிக்க.

உமது அறிக்கையில் தற்போது இருக்கக்கூடிய நீதிமன்ற முறைமையில் இல.44, 1973 ம் ஆண்டு நீதிமுறை நிர்வாக சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட தாக்கத்தை சுருக்கமாக மதிப்பிடுமாறு நீர் எதிர்பார்க்கப்படுகிறீர். (20 புள்ளிகள்)

7. "இவ்வனைத்து காரணங்களுக்காகவும் மேற்கொள்ளப்படும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரங்களினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய விலகல்கள் மற்றும் திருத்தங்களுக்கு அமைவாக உரோமன் டச்சுச் சட்டம் இலங்கையின் பொதுச்சட்டமாகும் என நான் நிறைவுசெய்கிறேன். ஆயின் அவ்வண்ணம் அதிகார சபைகள் வெளிப்படையாக விலகல்களை மேற்கொள்ளும் அதிகாரம் நீதிமன்றங்களை உள்ளடக்காது"

C.G Weeramantry J in *De Costa* Vs *Bank of Ceylon* (1969) 72 NLR 457 at p 513

மேலே தரப்பட்ட கூற்றின் பின்னணியில் சட்டவாக்கம் ஊடாக ஆங்கிலச் சட்டம் ஏற்கப்பட்டமையை ஆராய்க.

உமது விடையை ஆதாரப்படுத்த இயையான நியதிச் சட்டங்களையும் தீர்ப்புச் சட்டங்களையும் குறிப்பிடுக. (20 புள்ளிகள்)

8. கீழே தரப்பட்டவற்றில் இருந்து **ஏதேனும் இரண்டு (02) தலைப்புக்கள்** மீது சுருக்கமான குறிப்புகள் எழுதுக.

அ) இலங்கையில் காலனித்துவ ஆட்சிப் பகுதிக்கு முன்னரான காலப்பகுதியில் நீதி நிர்வாகம்

ஆ) இலங்கையில் நீதி நிர்வாகம் மீதான பிரித்தானிய கொள்கை

இ) டச்சு காலப்பகுதியில் டச்சுச் சட்டங்கள் மற்றும் உரோமன் டச்சு சட்ட ஏற்பு

ஈ) நீதிமுறை தீர்ப்புகள் ஊடாக ஆங்கில சட்டங்களின் ஏற்பு

**ஒவ்வொரு பகுதிக்கும் 10 புள்ளிகள் வழங்கப்படும்**

**(10x2=20 புள்ளிகள்)**

*பதிப்புரிமை பெற்றது*